28th September 1955] [Mr. Speaker]

elections now on, was ordered by the Court on 20th September 1955 to be released on bail. Because Dr. K. B. Menon did not get an answer to it, immediately he followed it up by an adjournment motion which was handed over yesterday. The Hon. Leader of the House has not been given notice of this short-notice question. It has been given to the Department and I do not think that that has been actually given to him for the purpose of giving a reply. In the face of the short-notice question which definitely speaks of alleged offences and an order by the Court and of the fact that hon. Member, Dr. K. B. Menon himself, is not sure of his ground and says that he only understands that there is no matter pending in Court, I think we shall be treading on dangerous grounds if we discuss a matter which is *sub judice*. Therefore, I find there is really no case of urgency made out. On these considerations I think that this adjournment motion is not in order and therefore leave is not given.

VI.—GOVERNMENT MOTION

MOTION UNDER RULE 23 OF THE ASSEMBLY RULES *re*; CHANGE OF THE ORDER OF BUSINESS.

* THE HON. SRI C. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I beg to move—

"That rule 23 of the Madras Assembly Rules be suspended and the House do resolve to transact Government business on Thursday the 29th September 1955."

MR. SPEAKER: The question is—

"That rule 23 of the Madras Assembly Rules be suspended and the House do resolve to transact Government business on Thursday the 29th September 1955."

The motion was put and carried.

VII.—GOVERNMENT BILL.

THE MADRAS TENANTS AND RYOTS PROTECTION (AMENDMENT) BILL, 1955.

THE HON. SRI M. A. MANICKAVELU: Mr. Speaker Sir, I beg to introduce the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill [a], 1955 and move—

"That the Bill be taken into consideration at once."

Sir, with regard to tenants and ryots, there is now protection to all categories of tenants except those in the estates which are not taken over. Now, they also require protection and that is why, last year also the Madras Tenants and Ryots Protection (Amendment) Act was extended. Now, it looks as though some more time is required to decide about this question of taking up the

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 22nd September 1955.

inams which are declared as estates and other inams also. Therefore, it is quite necessary in the interests of the tenants and agriculturists to have this Act extended. I hope, Sir, the House will agree to this motion.

MR. SPEAKER: The motion before the House is—

"That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1955, be taken into consideration at once."

* **SRI C. KANDASAMY:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ரிவினியூ மந்திரி அவர்கள் இப்பொழுது கொண்டு வந்திருக்கும் சட்டத்தை அதாவது இனாம்களாக இருக்கும் நிலத்தைப்பற்றிய பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக மேலும் மூன்று வருஷங்களுக்கு அவகாசம் கேட்கப்பட்டிருக்கிறது. இந்த இனாம்களை தீர்ப்பதற்கான பிரச்னை பெரியதாக ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய சட்டத்தில் பலவித பலவீனங்கள் இருக்கின்றன. இதைப்பற்றி நாங்கள் ஏற்கனவே சொல்லிக் கொண்டு வந்திருக்கிறோம். எஸ்டேட்டுகளுக்கு வகுக்கப்பட்டிருக்கும் சட்டத்தைப்போல் இனாம்களுக்கும் வகுக்கப்படவேண்டும் என்று நாங்கள் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். பல இனாம்கள் ஒழுங்குப்படுத்த வேண்டியதாக இருக்கிறது என்றும் நாங்கள் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட முழுதான சட்டத்தை இப்பொழுது கொண்டு வரப்படாமல் இருப்பதால் பல விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்றால் இவ்விதம் மூன்று வருஷங்கள் வேண்டும் என்று கேட்பது சரியல்ல. அவ்விதம் மூன்று வருஷங்களுக்கு நீடித்தால் இந்த அவகாசத்தை பயன்படுத்திக்கொண்டு அவர்களுடைய கஷ்டங்கள் அதிகமாக ஏதுவாகும். இப்பொழுதே இனாம்களை மாற்ற வேண்டுமென்று பலவிதமான வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன. பல விதமான சிக்கல்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. இன்னும் நீடித்தால் இன்னும் அதிகப்படியான சிக்கல்கள் ஏற்படுவதற்கு வசதி ஏற்படும். இப்பொழுதுள்ள இனாம் விவசாயிகளுக்கு பரிபூரணமாக நிவாரணம் அளிக்க இன்னும் கனம் மந்திரி அவர்கள் முன் வரவில்லை என்று தோன்றுகிறது. அந்த விவசாயிகளுக்கு இப்பொழுது எப்படிப்பட்ட தொந்தரவுகள் இருக்கின்றன என்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியாமல் இல்லை. அவரும் புரிந்து கொள்ளாமல் இல்லை. பல இடங்களில் நடந்து வருவதைப் பார்த்தால் பல உதாரணங்களைச் சொல்லலாம். இனாம்களையெல்லாம் பல பணக்காரர்கள் வாங்கிக் கொண்டு வருகிறார்கள். இனாம்களிலுள்ள உரிமைகளை யெல்லாம் பல விதமாக பயன்படுத்திக்கொண்டு பல விதமான கையெழுத்துக்களை விவசாயிகளிடம் வாங்கிக் கொண்டு அவர்களை பல மோசடிகள் செய்து கொண்டு வருகிறார்கள். இன்னும் பல இடங்களில் நிலங்களை சொந்தப் பட்டாவாக செய்து கொண்டு வருவதும் கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியாமல் இல்லை. இன்றைய தினம் பல இனாம் குடியானவர்களுக்கு பல விதமான தொந்தரவுகளைக் கொடுத்துக்கொண்டு வருவதும் கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியாமல் இல்லை. அதோடுகூட நிர்வாக உத்தியோகஸ்தர்கள் கூட இம்மாதிரி விஷயங்களில் 144 உத்தரவுகளும் 145 உத்தரவுகளும் போட்டுக் கொண்டு வருகிறார்கள். சாகுபடியும் செய்து கொண்டு வரும் குடியானவர்களை அவ்விதம் உத்தரவுகள் போட்டு விவசாயிகள் சாகுபடி செய்ய முடியாமல் எக்கச்சக்கமான நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இது கனம் ரிவினியூ மந்திரி அவர்களுடைய கவனத்திற்கு பல தடவைகளில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள சட்டத்தில் பல பலகீனங்கள் இருப்பதால் பல எக்கச்சக்கமான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் இந்த சட்டத்தை இன்னும் மூன்று வருஷங்களுக்கு நீடிப்பது என்பது சரியல்ல. ஒரு வருஷத்திற்கு மட்டும் நீடித்து வைத்தால் போதும் என்று தோன்றுகிறது. அதற்குள் இந்த சட்டத்தைக் கொண்டு வந்து குடியானவர்களுக்கு பரிபூர்ணமான உரிமை கிடைத்து இனாம்களில் வேலை செய்து வரும் குடியானவர்

28th September 1955] [Sri C. Kandasamy]

களுக்கு பட்டா கிடைக்கும் முறையில் ஒழுங்கான சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அதற்கு வேண்டியதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன். மூன்று வருஷம் நீடிக்க வேண்டும் என்றில்லாமல் ஒரு வருஷ காலம் நீடித்து வைத்தால் போதும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுது தான் இந்த சட்டத்தின் பரிபூரண பலன் கிடைக்கும். அப்பொழுது விவசாயிகளுக்கு சௌகர்யம் செய்யக்கூடிய சர்க்காராக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI S. RAMALINGAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஐந்து வருஷ காலத்தில் இப்பொழுது மூன்றுவது முறையாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த சட்டத்தின்படி மூன்று வருஷங்களுக்கு இந்த சட்டத்தை நீடிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இதற்குமுன் ஒவ்வொரு வருஷமும் ஒரு வருஷத்திற்கு இந்தச் சட்டத்தை நீடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வந்து இந்த வருஷம் மூன்று வருஷங்களுக்கு நீடிக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். இது எந்த காரணத்தினால் என்பது புரியவில்லை. இந்த மசோதாவில் சொல்லக்கூடிய காரணம் பல எஸ்டேட்டுகளை சர்க்கார் இன்னும் எடுத்துக் கொள்வதற்கு நோட்டீஸ் கொடுக்கவில்லை. ஆகையினால் இந்த சட்டத்தை நீடிக்க வேண்டும் என்ற காரணத்தைக் கூறுகிறார்கள். இன்றைக்கு கேள்வி நேரத்தில் பதில் சொல்லும்போது நோட்டீஸ் கொடுத்து எடுத்துக் கொள்ளப்படாத ஜமீன் எஸ்டேட்டு 1, அண்டர் டெனியூர் 8, இனும்கள் 70, ஆக 79 எஸ்டேட்டுகள் என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் இன்னும் சர்க்கார் எடுத்துக்கொள்ளாத எஸ்டேட்டுகள் இன்னும் 79 இருக்கின்றன. அவைகளை எடுத்துக் கொள்வதற்கு ஒரு வருஷம் போதுமானது. அதற்குள் இந்தப் பிரச்னையை தீர்த்து விடலாம். இந்த சட்டத்தை இன்னும் ஒரு வருஷத்திற்கு மட்டில் நீடித்து அதற்குள் எல்லா எஸ்டேட்டுகளையும் எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்குள் நம்முடைய ராஜ்யத்திலுள்ள எல்லா எஸ்டேட்டுகளையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு ரயத்துவாரி பிரதேசமாக மாற்றப்படவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு எஸ்டேட் சட்டத்தின்கீழ் வராத இன்னும் பல இனும்கள் நம் ராஜ்யத்தில் இருக்கின்றன. அந்த இனும் பிரதேசத்தில் சாகுபடி செய்யக்கூடிய குடியானவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. அந்த இனும்தார்களுடைய தயவு தாட்சண்யத்தின்கீழ் வாழ வேண்டியிருக்கிறது. இதர பிரதேசத்தில் இருக்கக்கூடிய குடியானவர்களுக்கு எந்த விதமான சலுக்கைகளும், பாதுகாப்பும் நாம் கொடுத்திருக்கிறோமோ அவற்றையெல்லாம் இனும் பிரதேசத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளும் அனுபவிக்கவேண்டிய வகையில் காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்று பல தடவைகளாக நான் சொல்லி வருகிறேன். சென்ற ஆண்டு அதுபற்றிய விவாதத்தின்போது, பார்லிமெண்டில் இது சம்பந்தமாக அரசியல் சட்டம் திருத்தப்படும், நஷ்ட ஈடு கொடுப்பது பற்றி மத்திய சர்க்காரே யோசித்துக்கொண்டு வருகிறார்கள், பார்லிமெண்டில் அந்தச் சட்டம் திருத்தப்பட்டவுடன் எல்லா நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படும் என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். பார்லிமெண்டில் அந்தச் சட்டம் திருத்தப்பட்டுவிட்டபோதிலும்கூட இவர்கள் நடவடிக்கை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை. இன்று காலையில்கூட ஒரு கேள்விக்கு அதிக நஷ்ட ஈடு கொடுக்கவேண்டியிருப்பதால் எல்லா இனும்களையும் உடனடியாக எடுத்துக் கொள்ளமுடியவில்லை என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஆனால் முன்பு சொன்ன வாதம் வேறு விதமாக இருந்தது. இப்போது இந்தச் சட்டத்தை மூன்றுண்டு தள்ளிப் போடுவதும் சரியல்ல. உடனடியாக எல்லா இனும்களையும் எஸ்டேட் சட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தச் சட்டம் வரும் வரையில் இதை ஒரு வருஷத்திற்கு நீடித்தால் போதும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1-10 p.m.

[28th September 1955

SRI M. PALANIYANDI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எல்லா இனாம்களையும் சர்க்கார் ஒழித்துவிடவேண்டுமென்று நாங்கள் சொல்லுகிற போதிலும் அதிகமான நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியிருப்பதால் அவற்றை உடனடியாக ஒழிக்க முடியவில்லை என்று மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு பல நல்ல சட்டங்களைச் செய்திருக்கிறோம். நல்ல சட்டங்களையெல்லாம் கொண்டுவர வேண்டுமென்றும் விரும்புகிறோம். எல்லா இனாம்களையும் ஒழிக்கக் கூடிய சட்டத்தை உடனடியாகக் கொண்டு வரவேண்டுமென்று அதற்காகத்தான் நாங்கள் சொல்லுகிறோம். காங்கிரஸ் கட்சியிலுள்ள முற்போக்குக் கருத்துக் கொண்டவர்களும்கூட இதனை ஆதரிக்கிறார்கள். ஏனென்றால் இனாம் பகுதிகளிலுள்ள விவசாயிகள் மிகவும் தொந்தரவுக்குள்ளாகிறார்கள். தோழர் ராமலிங்கம் சொன்னது போல முன்பு மந்திரி அவர்கள் பார்லிமெண்டில் இதற்கான திருத்தம் செய்யப்பட்டவுடன் விரிவான சட்டம் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். பார்லிமெண்டில் அந்தச் சட்டம் பாஸாகிவிட்டது. அந்தத் திருத்தத்தில் இதுபற்றிய விஷயம் வரவில்லையென்று இப்பொழுது சொல்லப்படுகிறது. இங்கும் காங்கிரஸ் ஆட்சிதான். பார்லிமெண்டிலும் காங்கிரஸ் ஆட்சிதான். ஆகவே அவர்களிடம் சொல்லி இதற்கான ஏற்பாட்டை சீக்கிரம் செய்யவேண்டும். உடனடியாக இந்தச் சட்டத்தைக் கொண்டுவராவிட்டால் தொந்தரவு அதிகமாகிவிடும். மேலும் இனாம்தாரிடமே கசப்பு அதிகப்பட்டு வருகிறது. கசப்பை நீடிக்கவிடக் கூடாது. ஆகவே இனாம்களை எல்லாம் உடனடியாக எடுத்துக்கொண்டு நஷ்ட ஈட்டை பல தவணைகளில் கொடுக்கிறோம் என்று சொன்னாலும்கூட இனாம்தார்கள் சந்தோஷப்படுவார்கள். அவர்களுக்கு மன ஆறுதலாகவும் இருக்கும். ஆகவே கனம் மாணிக்கவேலு அவர்கள் காலத்திலே நில வரம்பு, நிலவுடமை எல்லாவற்றையும் நிர்ணயிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்துவிடவேண்டும். தைரியமாக, தெம்பாக அது சம்பந்தமான காரியங்களை எல்லாம் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். முற்போக்குக் கருத்துள்ளவர்கள் எல்லோரும் அவரை ஆதரிப்பார்கள் , என்றும் உறுதி கூறுகிறேன். இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வருவதற்கு யாரும் தடையாய் இல்லை. ஆனால் இதை மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டாம். ஒரு ஆண்டு நீடித்துக்கொண்டு, அடுத்த ஆண்டுக்குள் எல்லா இனாம்களையும் ஒழிக்கும் விரிவானதொரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்றுதான் அவர்களை நாங்கள் கேட்டுக் கொள்ளுகிறோம்.

SRI P. VENKATESHA SHOLAGAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இனாம் ஒழிப்புச் சட்டத்தை எதற்காக உடனடியாகக் கொண்டுவரவேண்டுமென்பதற்கு நான் போன வருஷமே பல காரணங்களைக் கூறியிருக்கிறேன். குறிப்பாக மன்னார்குடி தாலூகாவை எடுத்துக்கொண்டால் பெருமாள் நத்தம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. சாதாரணமாக ரயத் நிலங்களில் இருக்கக் கூடிய விவசாயிகள் அனுபவிக்கின்ற உரிமைகள்கூட இந்த கிராமத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. அனுபவிக்க முடியவில்லை. கோவில் ஆபீசர்கள், இனாம்தாரர்கள் போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டு, அந்த நிலங்களிலுள்ள மரங்களை விவசாயிகள் அனுபவிக்கக்கூடாது என்று 144 உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். ஒன்றும் விவசாயிக்கு கொடுக்காமல் பூவரசை மரம், புளிய மரம், வேப்ப மரம் போன்றவைகளை வெட்டி காளவாய் போட்டிருக்கிறார்கள். இந்த இனாம் ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வராததினால் விவசாயிகள் படுகிற தொந்தரவு கொஞ்ச நஞ்சமல்ல. அந்த கிராமத்திலுள்ள ஆபீசர் தற்போது ஒரு வீடு கட்டவே ஆரம்பித்திருக்கிறார். இப்படி மரம் மட்டைகளை கூட விவசாயி அனுபவிக்கக்கூடாது என்றால் அவர்கள் கதி என்ன ? ஆகவேதான் ஒரு வருஷத்திற்குள் இனாம் ஒழிப்புச் சட்டம் உடனடியாக வரவேண்டும். ஆகவே இந்தச் சட்டத்தை ஒரு ஆண்டுக்கு நீடிப்பது போதும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நாங்கள் எதிர்ப்பதாக அர்த்தமில்லை. ஆனால் மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கிறதை ஆதரிக்கத்

தயாராயில்லை. ஏனென்றால் இந்தச் சட்டத்தை மூன்று ஆண்டுக்கு நீடிக்க வேண்டுமென்ற திருத்தத்தை மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இனாம் சட்டத்தை வெகு சீக்கிரம் கொண்டுவரவேண்டுமென்று நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, அந்தச் சட்டத்தைக் கொண்டு வராமல் இந்தச் சட்டத்தையே மூன்றாண்டு நீடிப்பதை நாங்கள் எதிர்க்கிறோம். சென்ற ஆண்டு ஒரு வருஷத்திற்கு இதை நீடிக்க வேண்டுமென்று அனுமதி கேட்டபோது, வெகு சீக்கிரம் விரிவான சட்டத்தைக் கொண்டு வந்துவிடுகிறோம் என்று கனம் மந்திரி அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். அதற்குப் பிறகு ஒரு வருஷம் ஆகியும் கூட அந்தப் பாதையில் கனம் மந்திரி அவர்கள் கொஞ்சம் கூடப் போனதாகத் தெரியவில்லை. இந்தப் பிரச்னையே எழாதவாறு இந்தச் சட்டத்தை மூன்று ஆண்டுகளுக்கு நீடித்து அப்படியே மூடி வைத்துவிடலாம் என்று தான் இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்களோ என்று நாங்கள் எண்ண வேண்டியிருக்கிறது. அந்த மாதிரியாகச் செய்வது சரியல்ல. அப்படிச் செய்தால் இந்த மந்திரி சபையின் காலத்தில் அந்தச் சட்டம் வரப்போவதில்லை. அதோடு புதியதாக வரப்போகிற சபையும்கூட ஒரு வருஷம் அதைச் செய்யாமல் இருக்கக்கூடிய அளவு முட்டுக் கட்டை போடுகிறது. இது சரியல்ல.

ஏனென்றால் இன்றைக்கு இனாம் கிராமங்களிலுள்ள பல விவசாயிகள் ரொம்பவும் தொந்தரவுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். குறிப்பாக சில பணக்காரர்கள் குடிவாரம், மேல்வாரம் இரண்டையும் வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் குடியானவர்களை பயமுறுத்தி நிலத்திலிருந்து அவர்களை வெளியேற்றி வருகிறார்கள். இந்த இனாம்கள் இன்னமும் நீடித்துக் கொண்டிருப்பதுதான் பல தகராறுகளுக்கும் காரணமாக இருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தின் ஆயுளை ஒரு ஆண்டுக்கு நீடித்துவிட்டு அதற்குள் எல்லா இனாம்களையும் ஒழிக்கும் விரிவான சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது சம்பந்தமாக எல்லா அங்கத்தினர்கள் கூறிய கருத்துக்களையும் நான் ஆதரிக்கிறேன். விரிவான இனாம் ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டுவர கனம் மந்திரி அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : The matter is not so simple as it was represented to be by the hon. Member, Sri 1-20 p.m. S. Ramalingam. He said that there were only 79 estates yet to be acquired by the Government. That number relates only to estates which come within the purview of the Zamindari Abolition Act. But there are other estates like the 1936 inams which do not come within the purview of the Zamindari Abolition Act. They are in the order of some thousands. The Government are very active in examining this question. In fact, even yesterday, I went through a file on this subject. Not a week passes without a file on this subject coming to me. We are looking into the matter as earnestly as possible.

I am asking for extending the life of the Act for three years because I do not want to give room for the charge that I am coming up with a motion for extending the Act every year. The matter will be clinched and I believe it will not take a very long time. By way of abundant caution, I have asked for extending the life of the Act for three years. There is no harm in asking for a longer period. Because we have asked for a longer period, it does not mean that we will sleep over the matter. Especially in the House of elders, the question is put why I should ask for

extension for one year only, instead of two or three years when it is felt that more time will be necessary. Therefore it is I thought that the period may be three years. I once again say that we are very keen about this question and that we are examining it as quickly as possible. I hope the hon. Members will pass the Bill without much ado.

MR. SPEAKER: The question is—

"That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1955, be taken into consideration at once."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. SPEAKER: The motion is—

"That clause 2 do stand part of the Bill."

SRI S. RAMALINGAM: Sir, I move the following amendment :—

"*For* the words and figures '7th October 1958' in line 14, *substitute* the words and figures '7th October 1956.'"

SRI M. KALYANASUNDARAM: I second the amendment, Sir.

SRI S. RAMALINGAM: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை மூன்று வருஷங்களுக்கு நீடிக்கவேண்டும் என்று கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் கோரியதற்குப் பதிலாக அதை ஒரு வருஷத்திற்கு நீடித்தால் போதும் என்று திருத்த வேண்டுமென்பதற்கு நான் போதுமான அளவுக்கு சற்று முன்னால் விளக்கியிருக்கிறேன். கவுன்சிலிலுள்ள பெரியவர்கள் அடிக்கடி எதற்காக சபை முன்பு இம் மாதிரி மசோதாக்கள் நீடிப்பதற்கு கொண்டுவரப்படவேண்டுமென்று சொல் லுகிருர்களே என்பதற்காக இந்த மசோதாவை மூன்று வருஷங்களுக்கு நீடித்து வைப்பது சரியல்ல. ஒரு வருஷம் வரை நீடித்தால், அடுத்த வருஷம் சபை முன்பு வரும்போது இந்த ஒரு வருஷ காலத்தில் ஏற்பட் டுள்ள சில குறைபாடுகளை நாங்கள் சர்க்காருக்குச் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். ஆகவே, ஒரு வருஷத்திற்கு மட்டும் இந்த மசோ தாவை நீடித்தால் போதும் என்று நான் கொடுத்திருக்கும் திருத் தத்தை சர்க்கார் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, whether it is one year or three years the same zeal is exhibited by the Minister. A mere change in the period of extension is not going to make a difference. Even after I explained the matter, the hon. Member has moved the amendment. Probably, I may tickle him a bit and agree to a two-year period. I think it will be acceptable to him. So, I move—

"*For* the words and figures '7th October 1958' in line 14. *substitute* the words and figures '7th October 1957.'"

The amendment of the hon. Member, Sri S. Ramalingam, was, by leave, withdrawn.

28th September 1955]

MR. SPEAKER: The question is—

" *For* the words and figures ' 7th October 1958 ' in line 14, *substitute* the words and figures ' 7th October 1957 '."

The amendment was put and carried.

Clause 2, as amended, was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I move—

" That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1955, as amended, be passed."

SRI T. C. NARAYANAN NAMBIAR: Sir, I am glad that the Hon. the Minister for Revenue was prepared to make a compromise as far as the period of extension was concerned. My anxiety is that within the period of two years he should be able to bring in a comprehensive legislation before this House.

MR. SPEAKER: The question is—

" That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1955, as amended, be passed."

The motion was put and carried and the Bill, as amended, was passed.

MR. SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

TRUTH ALONE TRIUMPHS